செ.வெ. எண்: 503 நாள்: 3.8.2011

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு, உயர்கல்வி கற்க கல்லூரிகளில் இடம் கிடைத்தும் போதிய நிதி வசதி இல்லாமல் சிரமப்படுவதாகத் தெரிவித்து, நிதி உதவி அளிக்க வேண்டி பல மாணவ, மாணவியர்களிடமிருந்து தலைமைச் செயலகத்திலுள்ள முதலமைச்சர் தனிப் பிரிவிற்கு மனுக்கள் வரப்பெற்றன.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு இதயமாக இருப்பது கல்வி தான் என்பதால், ஏழை, எளிய மற்றும் கிராமப் புற மாணவ, மாணவியர்கள் கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கல்வித் துறையில் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். தொழிற் கல்விக் கற்று வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு நிதி ஒரு தடைக் கல்லாக இருக்கக் கூடாது என்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாணவ, மாணவியர்களுக்குத் தேவையான நிதி உதவிகளை அவ்வப்போது வழங்கி கல்வி கற்பதை ஊக்குவித்து வருகிறார்கள்.

மாணவ, மாணவியர்களிடமிருந்து முதலமைச்சர் தனிப் பிரிவிற்கு வரபெற்ற மனுக்களை கருணையுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மருத்துவம் (MBBS), மற்றும் மருந்தாக்கியல் (B.Pharm.) கல்வி கற்க நிதி உதவி வேண்டிய 11 மாணவர்கள், பொறியியல் (B.E.), தொழில்நுட்பம் (B.Tech.) கல்வி கற்க நிதி உதவி வேண்டிய 89 மாணவர்கள் ஆக மொத்தம் 100 மாணவர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்கு தலா 25,000 ரூபாய் வீதம் மொத்தம் 25 லட்சம் ரூபாயை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட ஆணையிட்டார்கள்

அவர்களில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (3.8.2011) தலைமைச் செயலகத்தில், பொறியியல் (B.E.), தொழில்நுட்பம் (B.Tech.), மற்றும் மருந்தாக்கியல் (B.Pharm.) ஆகிய பட்டப் படிப்புகளில் பயிலும் 7 மாணவர்கள் மற்றும் 7 மாணவிகள் ஆக மொத்தம் 14 பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 3 லட்சத்து

50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கி வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த இ. ஜோதிலட்சுமி, கே. ஜான் சுந்தர், வி. வினோத் குமார், எம்.மாலதி, ஏ.கலைவாணி, சென்னையைச் சேர்ந்த எஸ். கல்பனா, வி. சந்தீப் குமார், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த யூ. ஜெயபிரகாஷ், ஏ. ஆனந்த், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.ஆனந்தி, சென்னையைத் சேர்ந்த B.வினோதினி, என்.ராஜேஷ் ஆகியோர் பொறியியல் கல்வி (B.E.) பயிலவும், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த P.சுரேஷ் தொழில்நுட்ப கல்வி (B.Tech.) பயிலவும், சென்னையைச் சேர்ந்த ஆர். ராகினி மருந்தாக்கியல் (B. Pharm.) பயிலவும் நிதி உதவியினை பெற்றுக் கொண்டனர்.

அப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கல்வியில் சிறந்த முறையில் முன்னேறி, எதிர்காலத்தில் நல்ல குடிமக்களாக உயர்ந்து, வாழ்வில் நலன்கள் பல பெற வேண்டும் என்று மாணவ, மாணவிகளை வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து நிதி உதவியை பெற்றுக் கொண்ட மாணவ, மாணவிகள் அனைவரும் தங்களது குடும்ப சூழ்நிலையை அறிந்து தக்க நேரத்தில் தாங்கள் தொழிற் கல்வி படிக்க நிதி உதவி அளித்து, வாழ்வில் ஒளியேற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள் : 3.8.2011